**செ. கு. எண்**:39 **நாள்**:03.02.2013

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 3.2.2013

கோயம்புத்தூர் மாவட்டம், நாசீபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அய்யாவு என்பவரின் மகன் வெள்ளிங்கிரி 24.1.2013 அன்று தானிகண்டி கிராமம் அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இக்கலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கெம்பப்பா என்பவரின் மகன் சித்துமல்லப்பா 18.1.2013 அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.2.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த வெள்ளிங்கிரி மற்றும் சித்துமல்லப்பா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த வெள்ளிங்கிரி மற்றும் சித்துமல்லப்பா ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**